**கலிகமுவ பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கலிகமுவ பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் கலிகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்து கொள்வனவு செய்த ஆண்டிலேயே மொத்த கிரயத்தையும் மூலதன செலவின் கீழ் பதிவழித்திருக்கையில் வருடாந்தம் தேய்மானமாக ரூபா 4,140,315 மீண்டுவரும் செலவாக பதிவழித்திருந்ததால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய விடயத்துடன் இணங்குவதுடன் எதிர்வரும் நிதியாண்டில் அதனை ஜர்னல் குறிப்பூடாக சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒரு தேய்மானக் கொள்கையை பின்பற்ற வேண்டும். |
| (ஆ) | இயந்திர உபகரணங்கள் மற்றும் கட்டிட மேன்பாட்டிற்காக மீளாய்வாண்டினுள் மேற்கொண்ட ரூபா 85,645 ஆன செலவு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நடைமுறையல்லாத சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154 பிரிவு மற்றும் சபரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 2005/4 மற்றும் 2005 ஜுன் 01 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 3 (iv) மற்றும் (x) பிரிவுகள் | காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து விபரங்களை பெற்று துண்டாக்கப்பட்டு விற்கப்பட்ட காணிகளின் விற்பனை பெறுமதியின் ஒரு சதவீத வரிப் பணத்தை சபைக்கு அறவிட வேண்டிய போதும் துண்டாக்கப்பட்ட காணிகளின் மதிப்பீட்டு பெறுமதி மீது மாத்திரம் ரூபா 842,944 ஆன வரிப் பணம் 2015 முதல் 2020 ஆண்டு வரை அறவிடப்பட்டிருந்தது. | சரியான உருதிகளின் பெறுமதியை பெற்றுக் கொள்வது சிக்கலான செயலாகையால் தற்போது அதற்காக கவனமெடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும், காணி பதிவாளர் அலுவலகத்தில் உறுதி செய்து கொண்டு இதன் சரியான உருதி பெறுமதியை பெற்றுக் கொள்ள பொருத்தமான பொறிமுறை ஒன்றை செய்து கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2012 ஜனவரி 05 ஆம் திகதிய இலக்க 01/2012 பொது நிதி சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவு | சமுதாய அடிப்படை அமைப்பு/சங்கங்கள் அதிகார எல்லையில் பதியப்பட வேண்டியதுடன் 03 ஒப்பந்தங்களிற்கு மேல் ஈடுபட்டிருக்க கூடாத போதும் அதற்கு மாற்றமாக 2020 மார்ச் முதல் மே வரையான காலத்தில் பிசோவெல கமநல அமைப்புடன் ரூபா 1,980,000 பெறுமதியான 04 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. | 2020 மார்ச் முதல் மே வரையான காலத்தினுள் பிசோவெல கமநல அமைப்புடன் தவறுதலாக 04 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்ததாக மற்றும் பொது நிதி சுற்றறிக்கை பிரிவின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க பொறுப்பேற்பதாக அறிவிக்கப்பட்டுள்து. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 11,305,512 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 6,333,270 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா 561,245 ஆனது. இம் மீதியை அறவிட நடவைடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020 ஆண்டினுள் நிலவிய கொரோனா நிலைமை காரணமாக ஆதனத் தடை செயற்பாடு இடம்பெறாததுடன் வருமான பரிசோதகர் பதவியில் நிலவும் வெற்றிடம் காரணமாக ஒரு வருமான பரிசோதகரால் 03 பிரிவுகளிலும் கடமை நிறைவேற்றல் கடடினமாகையால் வருமான சேகரிப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் வாகனங்களை வாடகைக்கு வழங்கும் நிலுவை மீதி ரூபா 1,246,145 ஆனது. | வாகனங்களை வாடகைக்கு வழங்கும் வருமானம் நிலுவையாக உள்ள பணத்தை அறவிட குறித்த நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | முத்திரைக் கட்டணம் | | |
| | மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டியதாக இருந்த 01 ஆண்டிற்கும் 03 ஆண்டிற்கும் இடையிலான முத்திரைக் கட்டண மீதி ரூபா 3,165,812 ஆனது. | முத்திரைக் கட்டண மீதியை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பண்டாரஹேன காணியை பிரிக்கும் போது தேசிய கட்டிடங்கள் ஆராய்சி நிறுவனத்தின் தகைமை சான்றிதழ் கிடைக்க முன்னர் குறித்த காணியின் தளக்கோலம் மற்றும் பிரித்தல் திட்டத்தினை அங்கீகரித்திருந்ததுடன், அவ்வாறு காணி தகைமை சான்றிதழ் கிடைக்காத 02 காணித் துண்டுகள் விற்கப்பட்டிருந்தன. அவ்வாறே தொழில் துறைசார் ஒருவரின் தகைமை சான்றிதழ் பெற வேண்டுமென பரிந்துரைக்கப்பட்ட 02 காணித் துண்டுகளும் அறிக்கை பெறாது விற்கப்பட்டிருந்தன. | தேசிய கட்டிடங்கள் ஆராய்சி நிறுவனத்தின் பரிந்துரை கிடைக்க முன்னர் காணி பிரிப்புத் திட்டம் அங்கீகரித்ததனை ஏற்றுக் கொள்வதுடன் தற்போது அந் நிறுவனம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய பரிந்துரைகளை பெற்றுக் கொண்டு மாத்திரமே பிரித்தல் திட்டத்தை அங்கீகரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய நிறுவனங்களின் பரிந்துரையை பெற்று முன் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அபன்பிடிய வத்த காணியின் 17 காணித் துண்டுகளை பிரித்து விற்கும் போது காணியின் மதிப்பீட்டு பெறுமதியின் மீது அறவிட வேண்டிய 01 சதவீத வரிப் பணம் ரூபா 217,230 ஆன போதும் 08 காணி துண்டுகளிற்கு மாத்திரம் ரூபா 60,000 அறவிட்டதில் ரூபா 157,230 ஆன வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | எஞ்சிய ரூபா 157,230 தொகையை துரிதமாக சபைக்கு செலுத்துமாறு ஏலவிற்பனையாளருக்கு அறிவித்துள்ளதுடன் அதன் பிரகாரம் குறித்த பணத்தை அறிவிட முயற்சி எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |